**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.**

**அ.வ.எண். 118/2018**

2025–ம் வருடம் அக்டோபர் திங்கள் 10–ம் நாளன்று 51 வது பிரதிவாதி தரப்பு சாட்சியாக **பி.வா.சா.16**–வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்.** | : | **தனபால்** | **தொழில்** | : | |
| **த/பெ.** | : | | **வட்டம்** | : | |
| **முகவரி** | : | | **மதம்** | : | |
| **ஜாதி** | : | | **வயது** | : | |

**<u>முதல் விசாரணை:</u>–**

நான் இவ்வழக்கில் 51 வது பிரதிவாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன்.

51 வது பிரதிவாதி தனபாலின் ஆதார் அட்டை நகல் பி.வா.சா.ஆ.88 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

கடந்த 21.10.2008 ஆம் தேதிய 51 வது பிரதிவாதி தனபாலின் பெயரிலான கிரைய ஆவணம் எண்.6388/2008 சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.89 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வரி ரசீது பி.வா.சா.ஆ.90 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (அசல் ஆவணத்தை தாக்கல் செய்யாமல் புகைப்பட நகல் தாக்கல் செய்ததால்

ஆட்சேபனை செய்யப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது.)

சொத்தின் வில்லங்க சான்றிதழ் கணிணி நகல் பி.வா.சா.ஆ.91 ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. (வில்லங்க சான்றிதழ் முழுமையாக இல்லாததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

51வது பிரதிவாதி தனபாலின் பெயரிலான கூட்டுப்பட்டா எண்.1336 கணிணி நகல் பி.வா.சா.ஆ.92 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**1 முதல் 6, 8 முதல் 15, 18, 19, 21 முதல் 40, 42 முதல் 46, 48 முதல் 50, 52 முதல் 62, 64, 65, 67, 68, 69, 70 முதல் 72, 74 முதல் 87, 89 முதல் 98, 100, 102, 104 முதல் 107, 114, 115 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது சொந்த ஊர் திருப்பூர் மாவட்டம். தும்பிவாடி கிராமத்தில் எனக்கும் என் குடும்பத்தாருக்கும் பூர்வீக வகையில் எந்த சொத்துக்களும் இல்லை. மேற்சொன்ன என் சொந்த ஊரிலிருந்து தும்பிவாடி கிராமம் சுமார் 70 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். பி.வா.சா.ஆ.89 கிரையபத்திரத்தை பி.வா.சா.ஆ.8 ன் அடிப்படையில் எழுதிக்கொடுத்த ரவிச்சந்திரனுக்கே அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களில் உரிமையில்லை என்றும் ஆகையால் பி.வா.சா.ஆ.89 ன் கீழ் உங்களுக்கு கிரையம் எழுதிக்கொடுப்பதற்கு ரவிச்சந்திரனுக்கு சட்டப்படி உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல அவருக்கு

தனிப்பட்ட முறையில் வாங்கவில்லை அவர் பொறுப்பான முறையில் தான் கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார். பி.வா.சா.ஆ.90 விவசாய நிலங்களுக்கு கொடுக்கக்கூடிய கிஸ்து ரசீது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.89 மனை நிலமாகத்தான் காட்டப்பட்டுள்ளது ஆகையால் பஞ்சாயத்தில் வீட்டு காலி மனைக்கு தான் வரி கட்டியுள்ளேன். பி.வா.சா.ஆ.91 யார் பெயரில் வில்லங்க சான்றிதழ் வழங்கினார்கள் என்று குறிப்பில்லை என்று சொன்னால் ரவிச்சந்திரன் பெயரில் வாங்கினேன். சொத்தை வாங்கும்போது வாங்கிய வில்லங்க சான்றிதழ் இன்றுவரை என் கைவசம் உள்ளது என்று சொன்னால் சரிதான். 106 நபர்கள் கிரையம் பெற்றதற்காக நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளீர்களா என்றால் இல்லை.

**ஒம்/.K.H.இளவழகன்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.